**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 198/2019 |
| Name | : Murugathal |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கருப்பட்டிபாளையத்தில் வசிக்கிறேன். கூலி வேலைக்கு செல்கிறேன். விபத்தில் இறந்து போன காளிமுத்து எனது கணவர். தேதி, மாதம் தெரியவில்லை. 2017 ம் ஆண்டு எனது கணவர் அவரது TVS 50 இருசக்கர வாகனத்தில் மாட்டு தரகு வேலை சம்மந்தமாக வீட்டில் இருந்து கிளம்பிச் சென்றார். நான் வீட்டில் இருந்த போது காலை சுமார் 08.30 –09.00 மணி அளவில் எனது உறவினர் சண்முகநதி எனக்கு தொலைபேசி மூலமாக நீலம்பூர் அருகே 407 வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்ற போது எனது கணவருக்கு காதிலும், மூக்கிலும் ரத்தம் வந்திருந்தது. மருத்துவமனையில் எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவரின் பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன்.இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1)சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எனது உறவினர் சண்முகநதி சொல்லி தான் தெரியும். யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.12 18:46:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்